முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1282

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

03.04.2023, திங்கட்கிழமை

1. கலியுகத்தை மாற்றவந்த வள்ளலே
கருணைகொண்டு சேவை ஆற்றுகின்ற அரங்கனே
அழியாமை தந்து உலகமக்களை மீட்கவந்த
ஆறுமுகன் என் அவதாரனே ஞானதேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் 20 ம் நாள், 03.04.2023, திங்கட்கிழமை)
ஆசிதனை அரங்கன் தொடர்புகூட்டி
அன்னதானசேவை ஆற்றுகின்ற மக்களெல்லாம்
3. வாசிவென்ற ஞானியர்களாக சக்திமாற்றம்
வையகத்தில் கண்டடைய ஆசி உண்டு
ஆசிதந்தேன் அரங்கன் பிரணவக்குடில் கொண்டுதான்
அகிலத்தில் அற்புதத்தை நடத்த போகிறேன்
4. வாசிவென்ற வரம்பல கண்ட ஞானியர்களெல்லாம்
ஆசிதந்து குடிலை அலங்கரித்து
அன்னதானசேவைக்குள் அருளமுதாக இறங்கி அற்புதத்தை நடத்திவர
அகிலத்தார் வந்து குடிலமுது உண்டு
5. அரங்கன் கரம்பற்றி உயர்தீட்சை பெற்று
அளவிலா தர்மத்தில் பொருளுதவி செய்து
அரங்கனின் சீடர்கள் என
அனுமதியும் அடையாளமும் பெற்றுவிட
6. பெற்றவர்களெல்லாம் பெரும்பேறு காண்பர்
பிசகின்றி தர்மவான்களாக ஞானவான்களாக
உற்றதொரு ஆற்றல் பெருக்கம் கூடி
உலகையே மாற்றும் உயர்சக்திமான்களாக மாறக்கூடும்

7. கூடவே இந்த அற்புதத்தை
குருஅரங்கன் கரத்தில் வைத்துள்ளேன் கலியுகத்தார் அரங்கன் கரம்பட தீட்சை
கருணைகொண்டு அரங்கன் நடத்துகின்ற தர்மத்தில்
பெருமைபட தொடர்புகூட்டி பொருளுதவி மிகுதி செய்து
8. தர்மம் தடைபடா வண்ணம் காத்துவந்தாலே
தரணிக்கு எல்லா பாதுகாப்பும் தானாய் பெருகி
பெருமைமிக்க நல்ல ஆளுமைகள்
பின்னடைவுகாணாத உலகமாற்றமும் இனிதே நடந்தேறக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–